THE WORD OF CHRIST

தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்



கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக
கொலோசெயர் 3:16


ழின் உள்ளே...

- ஆசிரியருரை
- உலக அளவில் பிரசித்திபெற்ற J.C.சோட் அவர்களின் செய்தி
- பெண்களுக்கான பகுதி
- சிறுவர்களுக்கான பகுதி
- வேத அறிவுப் போட்டி
- நாதன் அவர்களின் சரித்திர ஆய்வு
- நாளும் நடப்பும்



ஆசிரியர்
B.அர்ஜுனன்



மரம் 7 2007 ஆகஸ்ட் கனி 9

## ஆசிரியர் கடிதம்




வாசகர் அனைவருக்கும் வல்லவர் இயேசுவின் தூயநாமத்தில் வாழ்த்துக்கள். உங்களை இக்கடிதத்தின் மூலம் சந்திப்பதில் மிக்கமகிழ்ச்சியடைகிறோம். இவ்விதழை தொடர்ந்து வாசித்து சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள். காலங்கள் மிகவும் குறுகினபடியால் வேதத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, உங்களுடைய ஆத்துமா காக்கப்பட கர்த்தரைத் தேடுங்கள். நாங்கள் வெளியிடும் கிறிஸ்துவின் வசனம் டிவி மற்றும் ரேடியோ நிகழ்ச்சிகளையும் கேட்டு பயன்பெறுங்கள்.

உங்கள் பகுதியில் கர்த்தருடைய சபை இல்லையென்றால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு உதவ காத்திருக்கிறோம். ஒவ்வொருவரையும் கர்த்தருக்கு நேரே வழிநடத்துவதும், கர்த்தருக்குள் வளர்ப்பதுமே எங்களுடைய நோக்கம். நீங்கள் தேவனுடை ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள நாங்கள் உங்களுக்காக அனுதினமும் ஜெபிக்கிறோம்.


- ஆசிரியர்

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும்**

**கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி**




**செய்தியாளர்**
**B.அர்ஜூனன்**



உங்கள் WIN TV –யில் ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 6.15 முதல் 6.30 மணி வரை பாருங்கள். மேலும் உங்கள் வானொலியில் இலங்கை ஆசிய சேவை SW 25,41 மீட்டரில், ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 மணி வரையும் மேலும் கொழும்பு சர்வேதேச ஒலிபரப்பு MW 873 Khz-ல் காலை 8.50 முதல் 9.05 மணி வரையும் கேளுங்கள்.

THE WORD OF CHRIST
P.O.BOX.5
BATLAGUNDU -624 202 S.INDIA
Phone: 04543 263278 Mobile: 9443558041

"Go ye into all the world, and preach the gospel to every creature" Mark 16:15.
"The Churches Of Christ salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No. 5, Batlagundu - 624 202
SOUTH INDIA.

# திவேர்ட் ஆப் கிரைஸ்ட்

## THE WORD OF CHRIST

புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 7 ஆகஸ்ட் - 2007 கனி - 9


ஆசிரியருரை

# ஆத்துமாக்களுக்கு மேய்ப்பர்

# Overseer of Souls



ஆத்துமாக்களுக்கு ஒரு மேய்ப்பர் இருக்கிறார் அவரைக்குறித்து இச்செய்தியில் தியானிக்க உள்ளோம். பொதுவாக ஒரு நிர்வாகத்திற்கு முதன்மையானவர், வழிநடத்துனர்கள் அல்லது சபையின் கண்காணிகள் அதாவது மூப்பர்கள் என்று அழைக்கப்படும் மேய்ப்பர்களைக்குறித்து கேள்விப்பட்டிருக்கிறோம். இவர்களுக்கெல்லாம் மேற்பட்டவராக ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராக இருக்கிறார். இவரைக்குறித்து நீங்கள் அறிந்திருக்கிறீர்களா? பேதுரு இவரைப்பற்றி; "சிதறுண்ட ஆடுகளைப் போலிருந்தீர்கள்; இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள்" (1பேது.2:25) என்கிறார். மனிதன் பாவத்தின் விளைவால் தேவனைவிட்டு பிரிக்கப்பட்டவனாக இருந்தான். ஆகையால் பேதுரு குறிப்பிடும்போது சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள் என்று எழுதுகிறார். ஒருவேளை நீங்களும் அப்படிப்பட்ட ஒருவராக இருக்கலாம். நீங்கள் உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராக இருக்கிற இயேசுவிடம் திரும்பவேண்டும். அவர் ஒருவரே ஆத்துமாக்களுக்கு மேய்ப்பராக இருக்கிறார். ஒரு மந்தை சிதறடிக்கப்படாமல் பாதுகாக்கப்பட அதற்கு கண்காணிகள் அதாவது மேய்ப்பர்கள் தேவை. அவர்கள் கிறிஸ்துவுக்கு அடுத்தபடியாக இருந்துகொண்டு, அந்த மந்தையை சரியான பாதையில் வழிநடத்தி, இரவுபகலாக மந்தையைப் பாதுகாத்து, மழையையும் குளிரையும் பொருட்படுத்தாமலும், ஓநாய், நரி போன்ற கொடியவிலங்குகளுக்கும், அவைகளின் தந்திரங்களுக்கும் அவைகளை தப்புவித்து பாதுகாக்கிறார்கள். ஏனெனில், இவர்களுக்கு கொடுக்கப்பட்ட பணியும் அதுவே. ஆனால், இவர்களால் ஒரு ஆத்துமாவை திருப்தி செய்யவோ அல்லது அதை பாவத்திலிருந்து இரட்சிக்கவோ முடியாது. அதைச் செய்யவல்லவர் இயேசு ஒருவரே. அவரே ஆத்துமாக்களின் மேய்ப்பராக இருக்கிறார். அவரிடத்தில் திருப்பப்பட்டுள்ள

நீங்கள் அவரின் சத்தம்கேட்டு அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து உங்களுடைய ஆத்துமா இரட்சிக்கப்பட அவருக்கு உங்களை ஒப்புக்கொடுப்பீர்களா?

"நீங்கள் முற்காலத்திலே இவ்வுலக வழக்கத்திற்கேற்றபடியாகவும், கீழ்ப்படியாமையின் பிள்ளைகளிடத்தில் இப்பொழுது கிரியைசெய்கிற ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய ஆவிக்கேற்றபடியாகவும் நடந்துகொண்டீர்கள்" (எபே.2:2). இதையாரும் மறுக்கமுடியாது. நமக்கென்று ஒரு போதகர் இல்லாமல், நம் இஷ்டப்படியும், நமக்கு நாமே சில திட்டத்தை வகுத்துக்கொண்டு, கட்டவிழ்த்து விட்ட கோவில் மாடுகளைப்போலவும், மேய்ப்பன் இல்லாத ஆடுகளைப்போலவும், தேவனற்ற ஜனங்களாகவும் இருந்தோம் என்பதை நினைத்துப்பாருங்கள். அப்பொழுது நம்முடைய வாழ்வில் சந்தோஷம் இல்லை, சமாதானமில்லை, வருத்தத்தையும் வேதனைகளையும் அனுபவித்து வந்தோம். தேவனோ நம்மில் இரக்கங்கொண்டு நம்மை மீட்கும்படியாக ஆத்துமாக்களின் மேய்ப்பராகிய இயேசுவை அனுப்பினார். அந்த இயேசுவுக்கு நீங்கள் செவிகொடுக்கவேண்டும். மேலும் "அக்காலத்திலே கிறிஸ்துவைச் சேராதவர்களும், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்குப் புறம்பானவர்களும், வாக்குத்தத்தத்தின் உடன்படிக்கைகளுக்கு அந்நியரும், நம்பிக்கையில்லாதவர்களும், இவ்வுலகத்தில் தேவனற்றவர்களுமாயிருந்தீர்களென்று நினைத்துக்கொள்ளுங்கள்" (எபே.2:12). இப்படியிருந்த நாம் இப்பொழுது மெய்யான மேய்ப்பரிடத்தில் திருப்பப்பட்டுள்ளோம். அவர் நம்மை மேய்க்கிறவரும் போஷிக்கிறவருமாயிருக்கிறார். நம்முற்பிதாக்கள் காலந்தொடங்கி அவர்களை வழிநடத்தி வருகிறார். அவரை அறிந்தவர்கள் சொற்ப ஜனங்களே. அவர் எருசலேமைப்பார்த்து; "எருசலேமே, எருசலேமே, தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்து, உன்னிடத்தில் அனுப்பப்பட்டவர்களைக் கல்லெறிகிறவளே! கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே கூட்டிச் சேர்த்துக்கொள்ளும்வண்ணமாக நான் எத்தனை தரமோ உன் பிள்ளைகளைக் கூட்டிச் சேர்த்துக்கொள்ள மனதாயிருந்தேன்; உங்களுக்கோ மனதில்லாமற்போயிற்று" என்று சொல்லுகிறார் (லூக்.13:34). முதல் நூற்றாண்டில் பிரசங்கித்த ஸ்தேவான் கல்லெறிந்து கொல்லப்பட்டான் என்பதை நாம் அறிவோம். பவுலும் கூட அநேகந்தரம் கல்லெறியுண்டேன் என்கிறான். தங்களிடத்தில் கர்த்தர் அனுப்புகிற தீர்க்கதரிசிகளின் வார்த்தைக்கு செவிகொடுக்காமல் அவர்களை கல்லெறிந்து கொன்றார்கள். அவர்களுக்கு மனதிரும்ப மனதில்லை. ஆகையால் அனுப்பப்பட்டவர்களை அவர்கள் கல்லெறிந்து கொன்றார்கள். இன்றும் வாயின் வார்த்தைகளினால் அவரால் அனுப்பப்பட்டவர்களைக்கொல்லுகிறார்கள்.

இவர்களைக்குறித்து யூதா இப்படியாக சொல்லுகிறார்; "இவர்களுக்கு ஐயோ! இவர்கள் காயீனுடைய வழியில் நடந்து, பிலேயாம் கூலிக்காகச்செய்த வஞ்சகத்திலே விரைந்தோடி, கோரா எதிர்த்துப்பேசின பாவத்திற்குள்ளாகி, கெட்டுப்போனார்கள். இவர்கள் உங்கள் அன்பின் விருந்துகளில் கறைகளாயிருந்து, பயமின்றிக்கூட விருந்துண்டு, தங்களைத் தாங்களே மேய்த்துக்கொள்ளுகிறார்கள்; இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும், தங்கள் அவமானங்களை நுரைதள்ளுகிற அமளியான கடலலைகளும், மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களுமாயிருக்கிறார்கள்; இவர்களுக்காக என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது" (யூதா 11–13). இன்றைக்கு இவ்விதமாக தங்களைத் தாங்களே

மேய்த்துக்கொண்டு எங்களுக்கு ஒரு போதகர் தேவையில்லை, எங்களுக்கு ஒரு சபை தேவையில்லை, எங்களை நாங்களே பார்த்துக்கொள்வோம் என்று துணிவாய்ப்பேசுகிற அநேகரை நாம் காணமுடிகிறது. அப்படிப்பட்டவர்களில் ஒருவராக நீங்கள் இருக்கிறீர்களா? தேவனுக்குதான் அது எத்தகைய மனவேதனையைக் கொண்டுவரும். முதலாவது கிறிஸ்துவினிடம் திருப்பப்பட்ட ஒருவன் தான் எந்நிலையிலிருந்து திருப்பப்பட்டுள்ளோம் என்பதை சிந்திக்கவேண்டும். அதைவிட்டு மார்க்கந்தப்பி அலைகிற நட்சத்திரங்களைப்போல இருப்பார்களேயானால் அவர்களுடைய முடிவு நித்தியமான அழிவாகவே இருக்கும். அப்படிப்பட்டவர்களுக்கு என்றென்றைக்கும் காரிருளே வைக்கப்பட்டிருக்கிறது என்று யூதா குறிப்பிடுகிறார்.

ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்ட ஒருவன் அவருடைய வார்த்தைக்கு செவிகொடுக்கவேண்டும். இயேசு சொல்கிறார்; "நானே நல்ல மேய்ப்பன்; பிதா என்னை அறிந்திருக்கிறதுபோலவும், நான் பிதாவை அறிந்திருக்கிறதுபோலவும், நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்; ஆடுகளுக்காக என் ஜீவனையும் கொடுக்கிறேன். இந்த தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு; அவைகளையும் நான் கொண்டுவரவேண்டும், அவைகள் என் சத்தத்துக்குச் செவிகொடுக்கும், அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும்" (யோவா.10:14–16). இந்த உலகத்தில் உள்ள எல்லா ஆத்துமாக்களும் அவருடையவைகளே. அவர் எல்லோரையும் இரட்சிக்கும்படியாக இவ்வுலகத்திற்கு வந்தார். அவருடைய சத்தம் கேட்கும் ஆடுகளை மீட்டு தம்முடைய தொழுவத்தில் சேர்க்கிறார். அவருக்கென்று ஒரு தொழுவமுண்டு அந்த தொழுவத்தில் உள்ளவைகளையல்லாமல் வேறே அநேக ஆடுகளும் அவருக்கு உண்டு என்று சொல்லுகிறார். அந்த ஆடு ஒருவேளை நீங்களாக இருக்கலாம்! ஓ தேவனுடைய மனுஷனே, அவருடைய வார்த்தையின் சத்தம் கேட்டு அவருடைய வார்த்தைக்கு செவிகொடுத்து, அவர் ஏற்படுத்தியுள்ள மந்தையில் சேரும்படியாக பிரயாசம் எடு. அந்த மந்தைக்காக தமது ஜீவனை தியாகபலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அவர் ஆத்துமாக்களின் மேய்ப்பராக இருக்கிறபடியால் தம்மைத்தாமே சிலுவையில் ஒப்புக்கொடுத்து, பாவத்தைப்போக்கும் பலியாக சிலுவையிலே வெற்றிசிறந்தார். பாவத்திற்கு அதிகாரியாகிய பிசாசானவனை தம்முடைய மரணத்தினாலே வென்றார். "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறப்பும் சென்று, மேய்ச்சலைக் கண்டடைவான். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறனேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்" என்கிறார் (யோவா.10:9–10). அவர் வழியாக உட்பிரவேசிக்கப்பிரயாசப்படுங்கள். அப்பொழுது நீங்கள் மெய்யான மேய்ச்சலையும், மெய்யான சந்தோஷத்தையும் அவர்மூலமாக பெற்று இரட்சிக்கப்படுவீர்கள்.

இன்றைக்கு அநேகர் மெய்யான மேய்ப்பரை அறியாது ஆடுகளை தின்றுபோடுகிற மேய்ப்பர்களிடம் சிக்கிக்கொள்கிறார்கள். அல்லது கூலிக்காக வேலைசெய்கிற மந்தையில் இருக்கிறார்கள். வேலியே பயிரை மேய்ந்துபோட்டால் எப்படியிருக்கும், இன்றைக்கு அந்தவிதமான மேய்ப்பர்களை நாம் கேள்விப்படுகிறோம், பார்க்கவும் செய்கிறோம். திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறனேயன்றி

வேறொன்றுக்கும் வரான் என்ற வார்த்தையின்படியாகவே நடக்கிறது. ஆனால் ஆண்டவரோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும் அதுபரிபூரணமடையவும் வந்தார். நீங்கள் பரிபூரணமான ஆசீர்வாதங்களைப் பெறவும், நித்தியமான வாழ்வைப்பெறவும் அவருக்குச் செவிகொடுங்கள். அவர் நித்திய உடன்படிக்கைக்குரிய ஆடுகளின் பெரிய மேய்ப்பர். அவரை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் தேவனே. மந்தைக்காக ஜீவனை சிலுவையில் ஒப்புக்கொடுத்த ஆண்டவர், மந்தையினிடத்திலிருந்து எதையும் அவர் எதிர்பார்க்கவில்லை. மந்தைக்காக ஒரு சொட்டு இரத்தமும் இல்லாமல் முழு இரத்தத்தையும் கொடுத்தார். இன்றைக்கு மந்தையைக் காக்கிற அல்லது மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு கர்த்தர் பேதுருவின் மூலம் கொடுக்கிற புத்திமதிகளை வாசிப்போம்.

"உங்களிலுள்ள மூப்பருக்கு உடன் மூப்பனும், கிறிஸ்துவின் பாடுகளுக்குச் சாட்சியும், இனி வெளிப்படும் மகிமைக்குப் பங்காளியுமாயிருக்கிற நான் புத்தி சொல்லுகிறதென்னவென்றால்; உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்பு செய்யுங்கள். அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்" (1பேது.5:1–6). கர்த்தருடைய சபையானது தேவனுடைய திட்டத்தின்படி ஆரம்பிக்கப்பட்டது. இது கி.பி.33–ல் மூவாயிரம் அங்கத்தினர்களைக் கொண்டு எருசலேமில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த சபையிலே மூப்பர்கள் நியமிக்கப்பட்டார்கள். இந்த மூப்பர்களுக்குரிய தகுதிகளைக் குறித்து நாம் 1தீமோத்தேயு மற்றும் தீத்து புத்தகங்களில் அதிகமாக வாசிக்கின்றோம். இவர்கள் ஆண்டவருக்கு அடுத்தபடியாக இருந்து செயல்படுகிறவர்கள் என்றே சொல்லவேண்டும். இப்படிப்பட்டவர்களை இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரவான்களாக எண்ணவேண்டும். இவர்கள் மந்தையைக்குறித்த கரிசனையுள்ளவர்களாக இருக்கவேண்டும். நல்லொழுக்கமுள்ளவர்களாயும், தன்குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்கவேண்டும் ஏனெனில் தன் குடும்பத்தை நடத்த அறியாதவன் கர்த்தருடைய சபையை எப்படி நடத்துவான்? இந்த மூப்பர்கள் கர்த்தருடைய சிந்தை நிறைந்தவர்களாக இருந்துகொண்டு, வாலிபர்களையும் மற்றவர்களையும் கர்த்தருக்கேற்றசிந்தையில் வளர்க்கவேண்டும். வாலிபர்களும் எல்லாவிதத்திலும் மூப்பர்களுக்கு அடங்கியிருந்து கர்த்தருடைய சபையில் பணியாற்றவேண்டும். மந்தைக்கு எல்லாவிதத்திலும் தங்களுடைய பக்தியுள்ள வாழ்க்கையை காண்பிக்கிற மூப்பர்கள், ஆத்துமாக்களின் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவார்கள். கர்த்தர் நிலையான நித்தியமான வாடாத கிரீடத்தை அந்தநாளிலே தருவார். ஆகையால் மந்தைக்கு மாதிரியாக செயல்படவேண்டிய மூப்பர்கள் உலகம் கொடுக்கிற புகழ்ச்சியை விரும்பாமல் செயல்படவேண்டும்.

# விசுவாசத்தில் ஸ்திரமாகக்கட்டப்படுதல்
## Grounded in the Faith

J.C.Choate



முதல் நூற்றாண்டில் ஒருவன் இரட்சிக்கப்படும்படிக்கு சுவிசேஷத்தை (அதாவது 1கொரி.15:1–4–ல் விவரிக்கப் பட்டுள்ளபடி கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல்) கேள்விப் படுதல் அவசியாமாயிருந்தது. ஏனென்றால் (மாற்.16:15; ரோம.10:17) விசுவாசம் இருதயத்தில் உருவாக வேண்டிருந்தது (ரோம.10:10, எபி.11:6). இது ஒருவனை தன் பாவங்களுக்காக மனந்திரும்பவும் (அப்.2:38, அப்.17:30), கிறிஸ்து தேவனுடைய குமாரன் என அறிக்கையிடவும், பாவமன்னிப்பிற்கென்று, அல்லது இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெறும்படி (அப்.2:38; மாற்.16:16) வழிநடத்திச் சென்றது.

இரட்சிக்கப்படும்படிக்கு தேவன் ஜனங்களைக் கேட்டுக்கொள்கிற காரியங்கள் இவைகள் என உறுதிப்படுத்தும் வண்ணமாக 14 மனந்திரும்புதலின் நிகழ்ச்சிகள் அப்போஸ்தலர் புத்தகத்தில் காணப்படுகின்றன. இப்புத்தகம் முழுவதும் வாசித்து உங்களுக்கென்றுள்ள உண்மையை அறிந்துகொள்ளுங்கள். சபையின் ஆரம்பநாட்களில் இரட்சிக்கப்படும்படி ஒரே ஒரு வழி மட்டும் இருந்தது எனவும் மேலும் இன்றும் இரட்சிக்கப்படும்படிக்கு ஒரே ஒரு வழி மட்டும் இருக்கிறது எனவும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்.

நாம் தேவன் தம்முடைய வசனத்தில் என்ன சொல்லுகிறார் என படித்து புரிந்துகொள்ள வேண்டும். இரட்சிப்பு என்பது அறிவீனம் அல்லது தவறான அடிப்படையில் அல்லாமல் சத்தியத்தை அறிகிற அறிவு மற்றும் கீழ்ப்படிதலின் அடிப்படையில் ஏற்படுகிறது. ஒருவன் எதிர்பாராதவிதமாக கிறிஸ்தவனாக மாறி கர்த்தருடைய சபையின் அங்கத்தினனாகிறதில்லை. அவன் எப்படியோ மனிதபுத்திக்கு எட்டாத விதமாக, கண்டுபிடிக்கும்படிக்கு ஒரு நாளில், தேவனுடைய பிள்ளையாகவும் கர்த்தருடைய குடும்பத்தில் அங்கத்தினனாகவும், ஆகிவிடுகிறதில்லை. மாறாக, அவன் சத்தியத்தை கற்றறிந்தவனாகவும், தேவனுக்கு தன்னுடைய கீழ்ப்படிதலில் தான் உண்மையாக என்ன செய்தான் என்பதையும் அறிந்தவனாகவுமிருக்கிறான்.

இது எளிமையாக்கப்பட்டதாகவும் மிகவும் ஆரம்பநிலையாகவும் இருக்கலாம், ஆனால் கர்த்தர் கற்றுக்கொள்ளக்கூடிய அனைத்து திறமைகளின் அடிப்படையில் சகல ஜனங்களோடு இடைபடுகிறார். எந்த மனிதனும் தன்னுடைய மனதில் சரியாகபுரிந்துகொண்டு அதற்கு பதிலளிக்கக் கூடிய வகையில் அவர் சுவிசேஷத்தையும் இரட்சிப்பின் திட்டத்தினையும் மிக எளிதாக உருவாக்கினார். இதைப்போல தீர்க்கன், “அங்கே பெரும்பாதையான வழியும் இருக்கும்; அது பரிசுத்த வழி என்னப்படும்; அந்த வழியில் நடக்கிறவர்கள் பேதையராயிருந்தாலும் திசை கெட்டுப்போவதில்லை” (ஏசா.35:8) என எழுதினார்.

கேள்விப்படுதலில், புரிந்துகொள்ளுதல் மேலும் தேவனுடைய சித்தத்தை ஏற்றுக்கொள்ளுதலில், ஒருவன் உறுதியாக நாட்டப்பட்டு சத்தியத்தில் ஊன்றக் கட்டப்பட்டவனாக மாறுகிறான். அவன் இயேசு கிறிஸ்துவாகிய கன்மலையில், உறுதியாக அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டதாயிருக்கிற கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினனாக மாறுகிறான் (மத்.16:18; 1கொரி.3:11).

மத்தேயு13–ல் விதை விதைக்கிற உவமையில், இயேசு அது மிகவும் அவசியமாயிருந்த போதிலும் விதை விழுந்து முளைத்து பலன் கொடுப்பதற்கு இது போதுமானதல்ல என்ற உண்மையினை வலியுறுத்தினார். அது அதிகமாக அறுவடை பலனைக் கொடுக்கும்படி அது நல்ல இருதயத்தில் விழுந்து, வளர்ந்து முதிர்ச்சியடைய வேண்டியிருந்தது.

விதைக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய விதை நிலைத்திருந்து விருத்தியடையும்படி பராமரிக்கப்பட வேண்டும். அப்படிச்செய்தால் மட்டுமே அறுவடை செய்ய இயலும். ஒரு கிறிஸ்தவனின் வாழ்வில், அவன் இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டுமே முக்கியமானதாக இருக்கக் கூடாது, ஆனால் அவன் இரட்சிப்பில் நிலைத்திருக்க வேண்டும். ஏனென்றால், இரட்சிப்பைக் கொண்டு வரும் அடிப்படைக் கட்டளைகளுக்கு ஒருவன் கீழ்ப்படிந்த பிறகு, அவன் கிறிஸ்துவை தொடர்ந்து பின்பற்றவும், அவருடைய போதனைக்குக் கீழ்ப்படியவும், மரணபரியந்தம் அவருக்கு உண்மையாயிருக்கவும் வேண்டும் (வெளி.2:10).

கிறிஸ்தவர்கள் **விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்பட்டிருக்க வேண்டும்** என்பது இதன் பொருளாகும். பவுல் கொலோசெய சபை சகோதரர்க்கு இந்த வார்த்தைகளை எழுதினார்: " நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால் அப்படியாகும். அந்தச் சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது; அதற்கென்றே பவுலாகிய நான் ஊழியக்காரனானேன்" (கொலோ.1:23,24).

ஆனால் விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்படுதல் என்பதின் பொருள் என்ன? இதன்பொருள், முதலாவது ஒருவன் முதன்மை மூலைக்கல்லாகிய இயேசுகிறிஸ்துவின் மேல் கட்டப்பட்டவனாயிருக்க வேண்டும். மேலும் அவன் சத்தியத்திற்கு (ஆதாரமும்) ஸ்திரமும் தூணுமாகிய சபையின் அங்கத்தினனாக மாறினவனாயிருக்கிறான் எனப் பொருள்படுகிறது (1தீமோ.3:15).

ஒரு கிறிஸ்தவனாக இருக்கிறவன் இப்போதிருந்து தான் தொடர்ந்து வளரும்படிக்கு தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து வாசிக்க வேண்டியவனாயிருக்கிறான் என்று பொருள். தன்னுடைய ஆத்துமா தேவனுடைய சித்தத்தில் நங்கூரமிடப்பட்டுள்ளது எனவும், அவன் கர்த்தரிடத்தில் எல்லாவற்றிலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான் எனவும் பொருள்படுகிறது. அவன் தான் யார் என்பதையும், தான் எப்படியிருக்கிறான் என்பதையும், என்ன போதிக்கவேண்டும் என்பதையும், அவன் எப்படி வாழவேண்டும் என்பதையும் அவன் எங்கே போகின்றான் என்பதையும் அவன் அறிகிறான். அவைகளில் சந்தேகமில்லை, சந்தேகத்திற்கு இடமுமில்லை. அவன் குற்றமற்றவன் அல்ல, ஆனால் அவன் குற்றமற்ற ஒருவரை பின்பற்றுகிறான். கிறிஸ்துவுக்குள் அவன் பரலோகத்திற்கு கொண்டுசெல்லுகிற குறுகலான வழியில் செல்கிறான்.

ஒருவன் விசுவாசத்தில் ஸ்திரமாய் கட்டப்பட்டிருக்காவிட்டால், அவன் தந்திரமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே இங்கும் மங்கும் அலைகளைப்போல அடிப்பட்டு அலைகிறவனாயிருப்பான் (எபே.4:14), மேலும் சோதனை வரும் நேரத்தில் விசுவாசமற்றவனாக மாறிவிடுவான். அப்படிப்பட்ட மனிதன் தொடந்து நிலைத்திருக்கக் கூடாமல், அவனால் கர்த்தருடைய சபை தூஷிக்கப்படும். மாறாக, சத்தியத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டுள்ள ஒருவன் நிலைத்திருக்கிறான், உண்மையுள்ளவனாயிருக்கிறான், எந்த நற்கிரியையுஞ்செய்ய ஆயத்தமுள்ளவனாயிருக்கிறான். இவன் இரட்சிக்கப்பட்டிருப்பது மட்டும் அல்ல, இரட்சிப்பில் நிலைத்திருந்து, சத்தியத்திற்காக நின்று நல்மாதிரியை உருவாக்கி, நற்கனி கொடுத்து, முடிவிலே பரலோகத்திற்குச் செல்ல விரும்புகிறான்.

விசுவாசத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டவர்கள் மாற்றத்தை ஏற்படுத்துவார்கள். அவர்கள் உலகத்தை மாற்றுவார்கள். நீங்கள் விசுவாசத்தில் ஸ்திரமாகக் கட்டப்பட்டிருக்கிறீர்களா?

## நடப்புச் செய்திகள்

- திண்டுக்கல் மாவட்டத்தில் 1,407 தொடக்கப்பள்ளிக்கூடங்களில் செயல் வழிக்கற்றல் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- அலுவலகம் உள்பட வேலைபார்க்கும் அனைத்து இடங்களிலும் புகை பிடிக்க விரைவில் தடை விதிக்கப்படும் என்று 'உலக சுகாதார நிறுவன தலைவர் சிறப்பு விருது' பெற்ற மத்திய மந்திரி டாக்டர் அன்புமணி கூறியுள்ளார்.
- இந்தியாவின் முதல் பெண் ஜனாதிபதியாக பிரதீபா பாட்டீல் பெறுப்பேற்றுக்கொண்டார்.
- கிராமங்கள் வளர கிராமகல்வித்தரத்தை மேம்படுத்தி வேலை வாய்ப்பை உருவாக்கவேண்டும் என்று காந்திகிராம பல்கலைக்கழக நிகழ்ச்சியில் முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாம் கூறியுள்ளார்.
- தகவல் தொடர்பு, ஒலிபரப்பு, வானிலை ஆய்வுபோன்ற பணிகளுக்காக இந்திய வான்வெளி மையம் "இன்சாட்-4ஜி என்ற புதிய செயற்கை கோளை தயாரித்து வருகிறது. இந்த செயற்கைகோள் அடுத்த ஆண்டு (2008) இறுதியில் பறக்க விடப்படும்.

## தெரிந்து கொள்ளுங்கள்

- போதைப் பொருளால் பாதிக்கப்படும் உறுப்பு - நடுநரம்பு மண்டலம்
- முதன் முதலாக கண்டு பிடிக்கப்பட்ட எதிர் உயிரி - பென்சிலின்
- விரைவாக சுருங்கிவிரியும் ஆற்றலுடைய தசை - இதயதசை

பெண்கள் பகுதி

# நான் மன்னிக்க மாட்டேன்

# I Won`t Forgive

*-Betty Burton Choate*



உலகில் சந்தோஷத்துடனிருப்பதைவிட கோபத்துடனிருப்பதையே நல்லதென்று தெரிந்தெடுக்கிற ஜனங்கள் காணப்படுகின்றனர், ஜனங்கள் மன்னிப்பதை விட பொறாமையையே சுமந்து கொண்டிருக்கிறவர்களாக காணப்படுகின்றனர். எப்படியோ தங்களை வேதனைப்படுத்தியவர்களை அல்லது தங்கள்மேல் கோபங்கொண்டவர்களை தங்களுடைய பழிவாங்கும் செயலால் வஞ்சம் தீர்த்துக்கொள்ளுகின்றனர், மன்னிப்பதற்கு மறுக்கின்றவர்களாகவே காணப்படுகின்றனர்.

இப்போது இரு நபர்களை பார்ப்போம்: முதலாவது, நண்பர் எண்1 அறிந்தோ அல்லது அறியாமலோ நண்பர் எண்2 வுக்கு ஏதோ தீங்கிழைத்து விட்டான். பாராமுகமாக, அவன் தவறுக்காக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளான், எனவே அவன் மன்னிப்பு கேட்கிறான். ஆனால் நண்பர் எண்2 கோபத்தினை வெடிக்கச் செய்து மன்னிக்க மறுக்கின்றான்.

இப்போது என்ன சம்பவிக்கிறது? நண்பர் எண்1 ஐக்கியத்தினை தக்கவைத்துக் கொள்ள விருப்பமுடையவனாயிருக்கிறான், அவன் இயல்பான முறையில் நடந்துகொள்ள முயற்சிக்கிறான், பேசுகின்றான், சிரித்துக்கொள்ளுகின்றான், ஆனால் பலனில்லை. காலம் கடந்த செல்லுகையில், அவன் தன் வாழ்க்கையில் மற்றவர்களோடு உறவினை அமைத்துக்கொள்ளுகின்றான், கொஞ்சங் கொஞ்சமாக நண்பர் எண்2 ஐ மறக்கின்றான். அவன் அவனைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்ட போது, அவனுடைய கண்களில் எரிக்கின்ற தனல்போன்ற கோபத்தைக் கண்டு கசப்பான உணர்வுகள் இன்றும் உண்டென ஞாபகப்படுத்தப்பட்டு காரியங்கள் சரியாக வில்லையென அவன் வருத்தப்படுகிறான். ஆனால் பல முறை கடந்த பிரச்சனைகள் மேலும் நண்பன் எண்2 மறக்கப்படுகின்றான். பிறகு நண்பன் எண்2 ன் நிலை என்ன? அவன் தன்னுடைய கோபத்தை, தன் கசப்பினை, தான் இந்நிலைக்குள்ளாகும்வரை தன் நண்பன் மேல் தீர்க்கக்கஷ்டமான பிரச்சனையை வளர்த்திருக்கிறான். அவன் கோபத்துடனே தன் படுக்கைக்குச் செல்கிறான் கோபத்துடனே தன் படுக்கையைவிட்டு எழுகிறான். எப்பொழுதெல்லாம் அவன் நண்பன் எண்1 ஐ நினைக்கிறானோ? அப்பொழுதெல்லாம் அவனுக்குள்ளாக ஆத்திரமூட்டும் அலை மென்மேலும் எழுவதை அவன் உணர்கிறான். தன் நண்பன் மேலுள்ள தன்னுடைய சகிக்கமாட்டாத இயல்பு அவனுடைய பெருமைக்குரிய தனித்தன்மையோடே ஊடுருவுகிறது, அதனால் அவன் மிகக் கோபக்காரனாக மாறி, 'தன்னைக் கோபமூட்டுகிற' எவரையும் சகிக்கமாட்டாதவனாக மாறிவிடுகிறான். அவனுடைய வாழ்க்கை சிறிய மற்றும் பெரிய மோதல்களினாலும் எரிச்சல்கள் மற்றும் வெறுப்புகளினாலும் ஏற்படும் பிரிவினால் வளருகிறது.

அவன் மன்னிப்பைக் குறித்ததான ஒரு உபதேசத்தைக் கேட்கிறான். இயேசு, "..... மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார்......" (மத்.6:14,15) எனச்சொன்னார். ஆனால் அவன் நண்பன் எண்1 னுடைய வெட்கங்கெட்ட, வேண்டுமென்றே செய்த குற்றத்திற்கு எதிரான தன்னுடைய சிறிய மற்றும் நியாயமான முன் கோபத்தினை நிறுத்துப்பார்த்து, அப்புறம் அவன் தன்னுடைய சூழ்நிலைக்கு இந்த எச்சரிப்பினை செயல்படுத்த இயலாது என தீர்மானிக்கிறான். எனவே அவன் தன்னுடைய எரிச்சலை விடாதிருக்கிறான். மன்னிக்காத ஜனங்களுக்கு **உணர்வுபூர்வமாக** என்ன நடக்கிறது? அவர்கள் முன்கோபக்காரர்களாக மாறுகின்றனர், ஒத்துப்போக கஷ்டப்பட்டுக்கொண்டு அவர்கள் சந்தோஷமற்ற வாழ்க்கை வாழ்கின்றனர். தங்களுடைய சந்தோஷமின்மையால், அவர்கள் தங்களோடு அனுதினமும் நெருக்கமாக தொடர்புகொள்ளுபவர்களை விசனப்படுத்துகின்றதும், எதிப்பாராத மற்றும் கோபகொள்ளாதவர்கள்மேல் கோபத்தைக் காட்டுகிறார்கள்.

✣ மன்னிக்காத ஜனங்களுக்கு **சரீரப்பிரகாரமாக** என்ன நடக்கிறது?

அவர்கள் விபரீதமான உடல்நல பிரச்சனைகளாகிய அதிகமனஸ்தாபம், கோபம், மாரடைப்பு, பெருங்குடல் புண், மூட்டுவலி மேலும சரீர அழுத்தத்தால் ஏற்படும் விபரீதமான நிலைகள் மற்றும் கோபத்தின் மூலம் சரீரத்தில் விரோதம் வெளிப்படுதல் போன்றவற்றினால் அவதிப்படுகின்றனர்.

✣ மன்னிக்காத ஜனங்களுக்கு **சமூக சம்பந்தமாக** என்ன நடக்கிறது? மன்னிக்காத நபருக்கு நீண்டநாள் நட்பினை கொண்டிருப்பது கூடாத காரியமாயிருக்கும், மேலும் மன்னிக்கமுடியாத மனநிலையுடனிருப்பதால் குடும்ப அங்கத்தினர்களோடு கூட உறவுகொண்டிருப்பது கடினமாகயிருக்கும்

✣ மன்னிக்காத ஜனங்களுக்கு **ஆவிக்குரிய பிரகாரமாக** என்ன நடக்கிறது? இயேசு, "மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களையும் மன்னியாதிருப்பார்" (மத்.6:15) என எச்சரிக்கிறார். இவைகள் வீணான வார்த்தைகளல்ல, ஒரு நாளில் நம்முடைய நியாயாதிபதியாக இருக்கப்போகிற நம்முடைய கர்த்தர் உருவாக்கின வாக்கு உறுதியாகும். "அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ **மனந்திரும்பவேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார்**. மேலும் ஒரு நாளைக்குறித்திருக்கிறார்; அதிலே **அவர் தாம் நியமித்த மனுஷனைக் கொண்டு; பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்**; அந்த மனுஷனை மரித்தோரிலிருந்து எழுப்பினதினாலே அதின் நிச்சயத்தை எல்லோருக்கும் விளங்கப்பண்ணினார். மேலும் "என்னைத் தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயந்தீர்க்கிறதொன்றிருக்கிறது; நான் சொன்ன வசனமே அவனைக் கடைசிநாளில் நியாயந்தீர்க்கும்" என எச்சரிக்கப்படுகிறோம் (யோவா.12:48).

சங்கீதக்காரன் 34:11–18 வசனங்களில், "பிள்ளைகளே, வந்து எனக்குச் செவிகொடுங்கள்; கர்த்தருக்குப் பயப்படுதலை உங்களுக்குப் போதிப்பேன்.

"நன்மையைக் காணும்படி, ஜீவனை விரும்பி, நீடித்த நாட்களை அபேட்சிக்கிற மனுஷன் யார்? உன் நாவைப் பொல்லாப்புக்கும், உன் உதடுகளைக் கபட்டுவசனிப்புக்கும் விலக்கிக் காத்துக்கொள். தீமையை விட்டு விலகி, **நன்மைசெய்;**

சமாதானத்தைத்தேடி, அதைத் தொடர்ந்துகொள். கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது; அவருடைய செவிகள் அவர்கள் கூப்பிடுதலுக்குத் திறந்திருக்கிறது. தீமை செய்கிறவர்களுடைய பேரைப் பூமியில் இராமல் அற்றுப்போகப்பண்ண, கர்த்தருடைய முகம் அவர்களுக்கு விரோதமாயிருக்கிறது.

"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கி விடுவிக்கிறார். நொறுங்குண்ட இருதயமுள்ளவர்களுக்குக் கர்த்தர் சமீபமாயிருந்து, நருங்குண்ட ஆவியுள்ளவர்களை இரட்சிக்கிறார்" என எழுதினான்.

கோபத்தையும் விரோதத்தையும் கொண்டு தங்கள் இருதயத்தில் அன்பு வேர்விட்டு வளர சிறிய இடத்தையே கொடுக்கின்றார்கள். 1கொரி.13–ல் அன்பைப் பற்றிய பொக்கிஷங்கள் சில வசனங்களில் குறிப்பிடப்பட்டு, நம்முடைய வாழ்வில் அதனுடைய பலன்கள் பற்றியும் சுருக்கமாக எழுதப்பட்டுள்ளது. பின்வரும் இந்தக் கூற்றுகளை கவனத்துடனும் ஜெபத்துடனும் வாசியுங்கள்: "அன்பு நீடிய சாந்தமும் தயவுமுள்ளது; அன்புக்குப் பொறாமையில்லை; அன்பு தன்னைப்புகழாது, இறுமாப்பாயிராது, அயோக்கியமானதைச் செய்யாது, தற்பொழிவை நாடாது, சினமடையாது, தீங்கு நினையாது, அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்தில் சந்தோஷப்படும். சகலத்தையும் தாங்கும், சகலத்தையும் விசுவாசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் சகிக்கும், அன்பு ஒருக்காலும் ஒழியாது---"

தேவனால் நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாயிருப்போமானால் ஒரு கசப்பான, ஆத்திரமூட்டக்கூடிய மன்னிக்காத மனநிலையை, ஒரு அன்பின் மனநிலையினால் அகற்றப்பட வேண்டும். விரோதத்தை மனதில் அடக்கிவைக்கிறவர்கள் தவறான எண்ணங்கொண்டு தாங்கள் மன்னிக்கமறுப்பதில் நியாயமிருக்கிறது என நினைக்கலாம். அவர்கள் தங்களை மனவேதனைப்படுத்தியவர்களின் குற்றங்கள் நீக்கப்படும்படிக்கு மிகப்பெரிதாகயிருக்கையில் தங்களுடைய பாவம் சிறியதாயிருக்கிறது எனக் கருதலாம். ஆனால் தேவனுடைய அளவை வித்தியாசமாயிருக்கிறது. யாரோ ஒருவர் மற்றவருக்கு விரோதமாக தவறிழைத்துவிட்டால், அவன் மனந்திரும்பி மன்னிப்புக் கோருகிறார், அவனுடைய இருதயம் தாழ்மையுள்ளதாயும் தேவனுக்கு முன்பாக மனஸ்தாபப் படுகிறதாயுமிருக்கிறது. அவன் மன்னிக்கப்படுவான்.

எப்படியாயினும், ஒரு நபர் மற்றவரை மன்னிக்கமறுக்கும்போது, அவனுடைய மனநிலை தேவனுடைய பார்வையில் அவனுடைய பாவத்தை பெரிதாக்கும். 1யோவா.4:20,21 கூறுகிறது, "தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்? தேவனிடத்தில் அன்பு கூருகிறவன் தன் சகோதரனிடத்திலும் அன்புகூர வேண்டுமென்கிற இந்தக் கற்பனையை அவராலே பெற்றிருக்கிறோம்".

நீங்கள் விரோதத்தினை அடக்கிவைக்கும் குற்றஉணர்வைக் கொண்டிருந்து உங்களுடைய மன்னிப்பைக் கோரியிருக்கின்ற நபரை மன்னிக்க மறுத்துக்கொண்டிருப்பீர்களானால், உங்களுடைய தீர்மானத்தை மறுபரிசீலனை செய்யுங்கள். நீங்கள் கடைபிடிக்கும் மார்க்கம் ஒருவனுடைய சரீரம் மற்றும் ஆவிக்குரிய அழிவை ஏற்படுத்துபவையாகும். உங்கள் தேவை, நீங்களே மனந்திரும்பி மன்னிப்பு கோரவேண்டுமென்பதே!

# வஞ்சிக்கப்படாதிருங்கள்
## Be not deceived

*J.குளோரி அர்ஜுனன்*



இன்றைய உலகம் அநேகரை வஞ்சிக்கின்றதாக காட்சியளிக்கிறது. இப்படிப்பட்ட உலகில் ஸ்திரீகளாகிய நாம் அநேகவிஷயங்களில் வஞ்சிக்கப்படுகின்றோம். நமது ஆதித்தாயாகிய ஏவாளும் கூட கண்களின் இச்சைக்கு இடமளித்து வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்குட்பட்டாள், நாமும் கூட இந்த மாய உலகை இச்சித்து மாய்ந்து போய்விடக்கூடாது. கிறிஸ்தவ சகோதரிகளுக்கு வேதாகமத்தின் மூலம் எச்சரிப்பின் சத்தம் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது. இச்சத்தத்திற்கு செவிசாய்ப்போமா?

**சாத்தானால் வஞ்சிக்கப்படுதல்:** சாத்தான் நம்மை வஞ்சிக்கிறவனாயிருக்கிறபடியால் சாத்தானால் நாம் வஞ்சிக்கப்படுகிறோம். ஏவாளை சர்ப்பம் வஞ்சித்தது என ஆதி.3:13–ல் வாசிக்கிறோம். ஏவாளின் பார்வைக்கு இன்பமாய் காட்சியளித்தது அந்த விலக்கப்பட்ட கனி. அதைப் புசித்தாள், மீறுதலுக்குட்பட்டாள் (1தீமோ.2:14). அவளுடைய கண்களின் இச்சை சாத்தானுக்கு இடமளிக்கச் செய்தது முடிவில் சர்ப்பம் வஞ்சித்தது, நான் புசித்தேன் என்றாள் (ஆதி.3:13). இதைப்போலவே பொருளாசையாகிய பிசாசு நம்மை வஞ்சிக்கிறது. ஆம், நமக்கு உலகப்பொருட்களின் மேல் அளவில்லா ஆசை ஏற்படுகிறது, அதை வாங்கலாமா? இதை வாங்கலாமா? என ஸ்திரீகள் அழிந்து போகும் பொருட்களின் மீது கண்களைப் பறக்கவிட்டு பொருளாசையில் பழகிபோய்விடுகின்றனர். இப்படி பொருளாசையில் பழகின இருதயமுடையவர்களை வேதம் சாபத்தின் பிள்ளைகள் (2பேது.2:14) என அழைக்கிறது. அன்பு சகோதரிகளே, நாம் ஆசீர்வதிக்கப்படவே அழைக்கப்பட்டுள்ளோம். பிசாசு நம்மை வஞ்சிக்க இடம் கொடாதிருப்போம். நம்முடைய நாட்டில் கறிக்கோழி வளர்ப்பது போல சில வெளிநாடுகளில் மாம்சத்திற்கென்று வெள்ளை பன்றி வளர்ப்பார்களாம். அவைகளை கசாப்புக் கடைக்குப் பிடித்து செல்லுவது மிகக்கடினமாம். எனவே அவைகளுக்குப்பிடித்தமான பீன்ஸ் பயிர்களை அவைகளுக்கு முன் அள்ளி இறைப்பார்கள், அந்த பன்றிகள் பீன்ஸ் பயிர்களால் ஈர்க்கப்பட்டு கசாப்பு கடைவரை இறைக்கப்பட்ட பயிர்களைத் தின்னும் ஆர்வத்தில் தங்களுடைய நிலையை அறியாமல் கசாப்பு கடைக்கே வந்து சேர்ந்துவிடுமாம். பார்த்தீர்களா! சகோதரிகளே உலகம் இப்படித்தான் பல பொருட்களின் மேல் ஆசைகொள்ளசெய்து நம்மை சாபத்திற்குள்ளாக்கிவிடும். சாத்தான் நம்மை வஞ்சிக்க இடங்கொடாது அவனுக்கு எதிர்த்து நிற்போமாக!

**நம்மை நாமே வஞ்சித்தல்:** சில வேளைகளில் நம்மைநாமே வஞ்சித்துக் கொள்ளுகிறவர்களாயிருக்கிறோம். எப்போது தெரியுமா? நாம் திருவசனத்தைக் கேட்டும் அதின்படி செய்யாத போது வஞ்சித்துக்கொள்ளுகிறோம். "––நீங்கள் உங்களை

வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின் படி செய்கிறவர்களாயும் இருங்கள்" (யாக்.1:22). சிலர் வசனம் இப்படியா இருக்கிறது என மனோவாஞ்சையாயிராமல், எங்களுக்குக் கர்த்தர் அதை வெளிப்படுத்தினார் இதை வெளிப்படுத்தினார் என தங்களுடைய இருதயத்தின் எண்ணங்களுக்கே இடமளித்து வஞ்சிக்கப்படுகிறார்கள். நம்முடைய நினைவுகள் கர்த்தருடைய நினைவுகள் அல்ல என்பதை மறந்து விடக்கூடாது, திருவசனம் சபை கூடிவருதலை வலியுறுத்துகிறது (எபி 10:25). ஆனால் நம்மில் எத்தனைபேர் இவ்வசனத்திற்குக் கீழ்ப்படிந்து வாரந்தோறும் சபைக்குச் சென்று தேவனை ஆராதிக்கிறோம்? போதாகுறைக்கு முகூர்த்தங்களெல்லாம் ஞாயிற்று கிழமையிலே நடக்கிறது. போகாவிட்டால் உறவினர்கள் கோபித்துக்கொள்வார்கள் என கர்த்தருடைய நாளை தங்கள் சொந்த நாளாக மாற்றிவிடுகின்றோமா? நாளானது சமீபித்து வருகிறதை பார்த்து சத்தியத்தை அறிந்து பின் மனப்பூர்வமாக பாவஞ்செய்து மோசம் போனால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம். மேலும் கர்த்தருக்கு செலுத்த வேண்டியதை சபையில் செலுத்தாமலிருந்தாலும் நம்மை நாமே வஞ்சித்து அழிவை சம்பாதித்துக் கொள்வோம். சப்பீராள் என்ற ஸ்திரீ கர்த்தருடைய சமூகத்திற்குக் கொண்டு வந்து கொடுக்கவேண்டிய கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து கணவனோடு சேர்ந்து கர்த்தருடைய ஆவியை சோதித்தபடியால் மரித்துப்போனாள். அன்பு சகோதரியே, நீ இன்று வாழும் வாழ்வு, உன்னுடைய சம்பத்துக்கள் எல்லாமே கர்த்தர் உனக்கு கொடுத்தவை என அறிவாயா? பரலோக ராஜ்யத்தின் பணிக்கென நீ கொடுக்காமல் பொருளாசைக்கு இடமளித்து உன்னை நீயே வஞ்சித்துக் கொள்ளாதே "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான் பெறுக விதைக்கிறவன் பெறுக அறுப்பான்" (2கொரி.9:6).

**மற்றவர்களை வஞ்சித்தல்:** கிறிஸ்தவர்களாகிய நாம் கிறிஸ்துவைப்போல ஜீவிக்கிறவர்களாயிருக்கவேண்டும். ஆனால் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக் கொண்டிருக்கிற அநேகர் மற்றவர்களை வஞ்சித்து தேவநாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குகின்றனர். வேதாகமத்தில் லாபான் என்றவன் யாக்கோபை வஞ்சித்தான் என வாசிக்கிறோம் (ஆதி.29:25). யாக்கோபு லாபானின் மகள் ராகேலை திருமணம் செய்யும்படி அவளுக்காக ஏழு வருஷம் லாபானிடம் வேலை செய்தான். ஏழு வருடம் முடிந்ததும் லாபான் ராகேலுக்கு பதிலாக தன் மூத்த மகள் லேயாளை மனைவியாகக் கொடுத்து வஞ்சிக்கிறான். நம்முடைய தேவனோ வாக்குமாறாதவர். அப்படியிருக்க நாமும் மற்றவர்களுக்கு ஏதாவது காரியத்தில் செய்வேன் என வாக்களித்துவிட்டு செய்யாமலிருப்போமானால் இந்த லாபானைப் போலும் "கொடுப்பேன் என்று சொல்லியும் கொடாமலிருக்கிற வஞ்சகன் மழையில்லாத மேகங்களுக்கும் காற்றுக்கும் சரி" (நீதி.25:14) என்ற வசனத்திலுள்ளபடியும் இருப்போம். இப்படியிருப்பவர்களை வசனம் வஞ்சகன் என அழைக்கிறது. எனவே நாம் மற்றவர்களை வஞ்சியாதிருப்போமாக!

அன்பு சகோதரிகளே, வேதம் எச்சரிக்கிறபடி சாத்தான் நம்மை வஞ்சிக்க இடம் கொடாமலும், நம்மை நாமே வஞ்சித்துக்கொள்ளாமலும், மற்றவர்களை வஞ்சியாமலுமிருந்து நித்திய ஜீவனை சுதந்தரிக்கும்படி கிரியை நடப்பிப்போமாக!

ஆதாம் வஞ்சிக்கப்படவில்லை, ஸ்திரீயானவளே
வஞ்சிக்கப்பட்டு மீறுதலுக்கு உட்பட்டாள் - 1தீமோ.2:14

கிறிஸ்துவ தலைமைத்துவ பயிற்சி பாடங்கள்
Christian Leadership Training Course

பாடம் - 19

# பிரசங்கியாரின் நூலகம்
## The Preacher`s Library

J.C.Choate
*-Translated by G.Daniyal, Chennai*

ஒருவர் வாலிபராகவோ அல்லது முதிர்ந்தவராகவோ இருக்கலாம், அவர் வேதாகமத்தை வாசிக்கவும் கற்றுக்கொள்ளவும் வாசிக்கும் பழக்கத்தை அதிகப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். இது விசேஷமாக அதிக நேரம் தேவனுடைய வார்த்தையை பிறருக்கு போதிப்பதினால் பிரசங்கியார்களுக்குப் பொருந்தும்.

மாறாக, தேவன் வேதத்தின் மூலமாக அல்லாமல் வேறுவழியில் பிரசங்கியாருக்கு தேவையான செய்தியைக் கொடுப்பதில்லை. தேவன் நேரடியான வெளிப்பாட்டையோ...தனியாகவோ அல்லது வேதத்திற்கு அப்பாற்பட்டோ...அவர் பிரசங்கிக்க வேண்டியதைச் சொல்லவில்லை. பிரசங்கியார் பிரசங்கிக்க வேண்டியதெல்லாம் அவர் தேவனுடைய வார்தையை முன்பே படித்து புரிந்து கொண்டதன் அடிப்படையிலோ அல்லது முன்பு தான் கேட்டு கற்றுக்கொண்டதையோ ஒரு உண்மை பிரசங்கியார் பிரசங்கிக்க வேண்டும். வேதப்புத்தகத்தைப்பற்றிய அறிவில்லாமலோ அல்லது வேறொருவரிடமிருந்து அத்தகைய அறிவைப் பெறாமலோ பல புத்தகங்களைக் கற்காமலோ தேவனுடைய வார்த்தைக்கு ஒத்த பிரசங்கத்தைப் பிரசங்கிக்க முடியாது. வெறுமையிலிருந்து ஏதாகிலும் வரமுடியாது. உண்மையாகவே அப்போஸ்தலர்கள் பிரசங்கிக்கும் போதும் எழுதும்போதும் பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்பட்டார்கள் .ஆனால் இன்று நாம் அவ்வாறு நடத்தப்படுவதில்லை, ஏனென்றால் நாம் அற்புதங்கள் மற்றும் வெளிப்பாடுகள் மூலம் தேவனிடமிருந்து செய்திகளைப் பெறும் துவக்க காலத்திலே இல்லை, வேதவாக்கியங்களை ஆராய்ந்து பார்க்கும்படி நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம் (யோவான் 5:39). வேதத்தைப் படித்து (2 தீமோத்தேயு 2:15) நாம் பிரசங்கிக்க வேண்டும் (2தீமோத்தேயு 4:2). சத்தியம் நம்மை விடுதலையாக்கும் என்று கிறிஸ்து சொன்னார் அது எப்படியாகும்? சொல்லப்பட்டபடி வாசித்து, கற்று கீழ்ப்படிவதன் மூலமே அவ்வாறாகும் (எபிரேயர் 5:8,9). மனிதனை எந்த நற்கிரியையும் செய்ய தகுதியுள்ளவனாக ஆக்க வேதம் அவனுக்கு போதுமானதாயிருக்கிறது என்று பவுல் சொல்லுகிறார் (2தீமோத்தேயு 3:16,17). இந்த வாழ்க்கைக்கும் தேவனுக்கேற்ற ஜீவியத்துக்கும் தேவையான எல்லாவற்றையும் கர்த்தர் நமக்குத் தந்திருக்கிறார் ( 2 பேதுரு 1:3).

மேற்சொன்ன எல்லாம் ஒருவர் வல்லமையான பிரசங்கியாக இருக்க வேண்டுமென்றால் அவர் நன்கு வேதத்தைப் படித்து தயார் செய்ய வேண்டும் என்ற அவசியத்தை உணர்த்துவதாக உள்ளது. யார் வேண்டுமானாலும் எதையாகிலும் பேசி நேரத்தைக் கடத்தலாம் ஆனால் ஒருவர் பிரசங்கிக்கவும் அந்த பிரசங்கத்தைக் கேட்பவர்கள் பயனடையவும் வேண்டுமென்ற நோக்கமுடையவராக இருந்தால் பயன்படத் தக்கவைகளைச் சொல்லும்படியாக தன்னைத் தயார் செய்யும் அவசியமுண்டு. தேவனுடைய வார்த்தையை ஒருவர் கையாளுவதாலும், நித்தியத்தை அவர்கள் ஆத்துமா

எங்கே கழிக்கும் என்கின்ற தகவல்களைச் சொல்வதாலும், பிரசங்கியாக இருப்பது என்பது மிகவும் கவனத்துக்குரிய ஒன்று. இதைவிட வேறு எந்தவேலையும் ஜாக்கிரதைக்குரியதாக இருக்க முடியாது.

ஒவ்வொரு பிரசங்கியும் தன்னுடைய சொந்த நூலகத்தை உருவாக்க வேண்டுமென்று ஆலோசனை சொல்லுகிறேன். ஒரு பிரசங்கி தன்னுடைய தாய் மொழியில் அச்சிடப்பட்ட நல்ல வேதப்புத்தகத்தை வாங்க வேண்டும். இரண்டு மொழிகள் தெரிந்தவராக இருந்தால் அவ்விரு மொழிகளிலும் நன்கு தயாரிக்கப்பட்ட வேதபுத்தகங்களை வாங்கவேண்டும். மூல மொழியிலிருந்து மிகச்சிறந்த முறையில் மொழியாக்கம் செய்யப்பட்ட வேதபுத்தகங்களையே வாங்கவேண்டும். நான் ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் ஆங்கிலத்தில் மட்டும் பல வகையான நடைகளில் மொழி பெயர்ப்புகள் வந்துவிட்டன. மற்ற மொழிகளிலும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மொழி பெயர்ப்புகள் வந்துவிட்டன ஜேம்ஸ் அரசன் மொழி பெயர்ப்பே இன்றும் ஆங்கிலத்தில் பெரும்பான்மை மக்கள் ஏற்றுக்கொண்ட ஒன்றாக இருக்கிறது. இந்தக் காலத்தில் ஜேம்ஸ் அரசரின் புதிய மொழி பெயர்ப்பில்,அதிலுள்ள அநேக வார்த்தைகள் 1660–ல் உள்ளது போலில்லாமல் இப்போது உள்ள நடைமுறையில் உள்ளது போல் இருப்பதாக நம்புகிறார்கள்.நியூ அமெரிக்கன் ஸ்டேன்டர்டு வேர்சன் இன்னுமொரு நல்ல மொழிபெயர்ப்பாகும் (New American Standard Version) இதுபோல இன்னும் பல இருக்கின்றன. ஆனால் அவைகளில் வரும் சுருக்க விளக்கங்கள், தனிப்பட்ட கருத்துக்கள் போன்றவற்றைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள், அவைகளையும் உங்கள் தனிப்பட்ட ஆய்வுகளையும் மற்ற மொழி பெயர்ப்புகளோடு ஒப்பிட்டுபடிப்பதற்காகவும் பயன்படுத்தலாம்.

ஆனால் நீங்கள் பிரசங்கம் செய்வதற்கு சரியான நிலையைப் பின்பற்றும்படி ஒரு குறிப்பிட்ட மொழி பெயர்ப்பைப் பயன்படுத்துங்கள். நீங்கள் பிரசங்கிக்கிற மக்களில் அநேகருக்குத் தெரிந்த ஒரு மொழி பெயர்ப்பிலிருந்து வசனங்களை மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்.

நீங்கள் பயன்படுத்தாத மொழி பெயர்ப்புகளின் மீது மிகுந்த வெறுப்பைக் காட்டி அவைகளை வைத்திருக்க கூடாது என்று தடை செய்யாதீர்கள். அவ்வகை மொழி பெயர்ப்புகளைப் பற்றி மக்களுக்கு எச்சரிப்போடு அறிவிக்கவேண்டும், ஆனால் அவைகளை பயன்படுத்தவே கூடாதென்று தடைசெய்ய யாருக்கும் அதிகாரமில்லை,

மேலும் ஒரு குறிப்பிட்ட வார்த்தையோ அல்லது பாடத்தையோ குறித்து நன்கு அறிந்து சொன்ன ஒத்தவாக்கிய அகராதி (Concordance) ஒன்று உங்களுக்கு வேண்டும். நீங்கள் போதிக்கின்ற பாடம் தொடர்பான அநேக வேத வாக்கியங்களை போதிக்கும் போது அது சிறப்பாக அமையும்.

நீங்கள் வேதத்தைக் கற்க வெப்ஸ்டர்அகராதி அல்லது ஆங்கில அகராதியோடு வேறு நல்ல ஒன்று மிகவும் உதவியாக இருக்கும். ஒரு வார்த்தையினுடைய பொருள் மற்றும் உச்சரிப்பு சரியான எழுத்துக்களை வார்த்தைகளுக்கு பயன்படுத்துதல் போன்றவற்றுக்கு அகராதி மிகவும் பயனுள்ளதாகயிருக்கும்.

மேலும் உங்கள் வேத அகராதியானது பல வேத வார்த்தைகளையும் அர்த்தங்களையும் அதற்கொத்த வார்த்தைகளையும் தெரிந்து கொள்ள உதவும். இந்த

வகையில் உங்களுக்கு மிகவும் பயனுள்ள ஒரு நல்ல புத்தகம் W.E.வைன் எழுதிய புதிய ஏற்பாட்டு வார்த்தைகளின் அகராதியாகும்.

உங்கள் நூலகத்தில் சேர்க்கப்பட வேண்டிய இன்னொரு நல்ல புத்தகம், வேதத்திலுள்ள இடங்கள் வரையப்பட்ட வேதாகம பூகோள புத்தகமாகும். இன்னும் ஆழ்ந்து படிக்க விரும்புகிறவர்களுக்கு கிரேக்க மற்றும் எபிரெய சொல்லகராதிகளை வாங்கி அதில் வேதத்தின் பாஷைகளில் உள்ள வார்த்தைகளின் பொருளை நன்கறிந்துகொள்ளலாம். கிரேக்க மொழியில் தேயர் எழுதிய சொல்லகராதி பெரிதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும்.

மேலும் வேத விளக்கவுரைகள் தலைப்புகளில் செய்யப்பட்ட ஆய்வுகள் மேலும் அநேக புத்தகங்கள் உண்டு. இவைகளில் அநேகம் நம் சகோதரர்களாலேயே எழுதப்பட்டவை.

நீங்கள் வாசிக்கவும் படிக்கவும் வாங்குகின்ற புத்தகங்களைப் பற்றி எச்சரிக்க விரும்புகிறேன். புத்தகக்கடைகளில் கிடைக்கின்ற புத்தகங்கள், குறிப்பாக மதசம்பத்தப்பட்ட புத்தகங்களை விற்பனை செய்யும் கடைகளில் அதிகம் பிரிவினை சபையைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டவையாகும். அவைகளில் அதிக உபதேசப்பிழைகள் இருக்கும். அப்படி பிழையுள்ள புத்தகங்களைப் படித்து ஒப்பிட்டு சரியானதை அவர்களுக்கு பதிலளிக்க விரும்பினால் அவைகளை வேதத்தோடு சரியாக ஒப்பிட்டுப் பார்த்து குறிப்பிட்ட பாடத்தை உறுதிப்படுத்துங்கள்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிற நீங்கள் நம் சகோதரர்களால் எழுதப்பட்ட புத்தகங்களை வாங்கிப்படிக்க விரும்பினால் அவைகளை நம் சகோதரர்களால் நடத்தப்படும் புத்தகக்கடைகளில் வாங்கலாம் அல்லது சபையில் அவ்வித புத்தகங்களை வேறு எங்கே வாங்கலாம் என்று கேட்டு வாங்கிக்கொள்ளலாம்.

கிறிஸ்தவர்களால் நடத்தப்படும் மாதப்பத்திரிக்கைகள் அல்லது மற்ற பத்திரிக்கைகள் இருக்குமானால் அவர்களுடைய வாடிக்கையாளர் பட்டியலில் நீங்களும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுங்கள் உலகெங்கிலும் நடக்கும் கர்த்தருடைய பணிகளோடு தொடர்பு கொள்ளும்படி வெளிநாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளையும் வரப்பெறலாம். இந்தவிதமான பத்திரிகைகளும் புத்தகங்களும் உங்களுக்குப் பயனுள்ளதாயும் உதவியாயிருந்தாலும் அவைகளும் மனிதர்களால் எழுதப்பட்டவை என்பதை மறந்து விடாதீர்கள். எல்லாவற்றிக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையை கேட்கவும், அவைகளைக் கற்பதிலும், வாசிப்பதிலும், பிரசங்கிப்பதிலும் எல்லாவற்றுக்கும் மேலாக தேவனுடைய வார்த்தையை முதன்மையாக பின்பற்றவும் மறந்துவிடாதீர்கள். பிறரை விசேஷமாக பிரசங்கியார்களையும் சபையில் எழுதும் பணி செய்பவர்களையும் கனம் பண்ணுங்கள் ஆனால் கிறிஸ்துவையே பின்பற்றுங்கள்.

உங்கள் ஜீவியகாலத்தில் நூலகத்தில் புத்தகங்களைச் சேருங்கள், உங்கள் புத்தகங்களை மேலான உபகரணங்களாகக் கருதி பராமரியுங்கள். நீங்கள் ஊழியத்திலும் அறிவிலும் திறமையிலும் சேவையிலும் வளரும் போது தேவன் ஆசீர்வதிப்பார்.

**ஆண்டவருக்கு தன்னை அர்ப்பணித்து ஊழியம் செய்யக்கூடிய திருமணமாகாத ஊழியர்கள் தேவை இவ்விதழின் ஆசிரியரை மொபைல் எண்மூலம்தொடர்பு கொள்ளவும். 94435 58041**

## ஜெபியுங்கள்






- 27வது வாசகர் கருத்தரங்கை கர்த்தர் ஆசீர்வதித்தமைக்காக...
- புதிதாக இலங்கை சர்வதேச ஒலிபரப்பில் வெளிவரும் நிகழ்ச்சிக்காக ...
- ஆந்திர ஊழியங்களுக்காக ...
- சுகவீனமாய் இருக்கும் சகோ. பாலுச்சாமிக்காக ...
- கொடைக்கானல் சபை வளர்ச்சிக்காக...
- தமிழ்நாடு, கர்நாடகா, மற்றும் ஆந்திரபகுதியில் ஊழியம் செய்யும் சகோ. சாலொமோன் வெங்கடப்பாவிற்காக...


# உங்களுக்கோர் நற்செய்தி!

வானொலியில் மேலும் ஒவ்வொரு மாதமும் கடைசி சனிக்கிழமை தாவீது – யோனத்தானின் உரையாடல் மற்றும் தேவ செய்தியை கொழும்பு சர்வதேச வானொலி **MW 873 KHZ** - ல் காலை 8.50 முதல் 9.05 மணி வரை கேட்டு பயன்பெறுங்கள் இது கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சி




**27வது வாசகர் கருத்தரங்கில் கலந்துகொண்டவர்கள்**

கிறிஸ்துவின் வசனம்



கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் நடைபெற்ற வாசகர் கருத்தருங்கில் கலந்து கொண்டவர்கள்

கிறிஸ்தவர்களின் கீதம்

**கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள் - எபே.5:10**

## வேத அறிவுப்போட்டி எண் 83-ல் வெற்றிபெற்றவர்கள்

G.A. ஜான்சன் -திருச்சி
J. நிர்மலாஜான் -மதுரை
K. மோகன் -கொ.பாளையம்
Mrs. எலியாம்மா -கடலூர்
J. ஜாய் மேரி -திண்டுக்கல்
K.M. ஜான் -கரடிக்குளம்
P.S. லலிதாபிரேமகுமாரி- மதுரை
P. அலிஸ்மேரி -வத்தலக்குண்டு
J. ஐசக் -திருநெல்வேலி
Mrs. மரகதம்திரவியம் -கோம்பை
G.P. ஏசையன் ராஜ் -கோபி
D. யேசுதாஸ் -சித்தூர் (A.P)
N. கமலவேணி -சென்னை

## வேத அறிவுப்போட்டி எண் 83-ன் விடைகள்

1. யோவான்ஸ்நானனை- மத்.3:15
2. எஸ்றா - எஸ்.8:23
3. சிறைச்சாலைக்காரன்- அப்.16:27
4. தீமைக்கு - நீதி.4:27
5. நீதிக்கு - ரோம.6:18
6. கர்த்தர் - ஏசா.66:22
7. தேவனால் - 1கொ.11:12
8. உமது பிரமாணங்களை- சங்.119:71
9. கலங்காமலும் - 2தெச.2:2
10. வல்லமையிலும், நியாயத்திலும் - யோபு37:23

## பொது அறிவுச் சோதனை

1. தமிழ் நாட்டின் நுழைவாயில் எனப்படுவது எது?
அ) சென்னை ஆ) கோவை இ) தூத்துக்குடி
2. இளம்பிள்ளை வாத தடுப்பு மருந்தைக் கண்டு பிடித்தவர் யார்?
அ) வில்சன் ஆ) ஜோன்ஸ்சால்க் இ) லூயிஸ்
3. பசுமை புரட்சியின் தாயகம் எது?
அ) மெக்ஸிகோ ஆ) தைவான் இ) தென்கொரியா
4. உலகின் முதல் செயற்கைகோளை உருவாக்கிய நாடு எது?
அ) ரஷ்யா ஆ) அமெரிக்கா இ) ஜப்பான்
5. 9-வது ஆசிய கோப்பைபோட்டி எந்த நாட்டில் நடைபெறும்?
அ) இந்தியா ஆ) பாகிஸ்தான் இ) இலங்கை

**விடைகள்**
1. தூத்துக்குடி
2. ஜோன்ஸ்சால்க்
3. மெக்ஸிகோ
4. ரஷ்யா
5. பாகிஸ்தான்

**தீண்டாமை ஒரு பாவச்செயல்**
**தீண்டாமை ஒரு பெருங்குற்றம்**
**தீண்டாமை மனிதத் தன்மையற்ற செயல்**

# நான் தேவனுடைய சத்தமாயிருக்கிறேன்

*P.Govindarajan*

யோவான் சுவிசேஷம்1:19–23 யோவான்1:19–ன்படி ஆசாரியரும் லேவியரும் யோவானிடத்தில் வந்து நீ யார் என்று கேட்டார்கள். அவன் மறுதலியாமல் அறிக்கையிட்டது மன்றி, நான் கிறிஸ்து அல்ல என்றும் அறிக்கையிட்டான். அப்படியானால் லேவியர்கள் அவனை கிறிஸ்து என்று நினைத்திருந்தார்கள். அவனோ நான் கிறிஸ்து அல்ல என்று அறிக்கையிட்டான். மேலும் அவர்கள் யோவானை அநேக வார்த்தைகளினாலே தொந்தரவு செய்தார்கள். எப்படியென்றால் நீர் எலியாவா என்று கேட்டார்கள். அதற்கு நான் அவன் அல்ல என்றான். நீர் தீர்க்கதரிசியானவரா என்று கேட்டார்கள். அதற்கும் அல்ல என்றான்.

அவர்கள் பின்னும் அவனை நோக்கி நீர் யார் எங்களை அனுப்பினவர்களுக்கு உத்தரவு சொல்லும்படிக்கு, உம்மை குறித்து என்ன சொல்கிறீர் என்று கேட்டார்கள். அதற்கு அவன் கர்த்தருக்கு வழியை செவ்வை பண்ணுங்கள் என்ற ஏசாயா தீர்க்கதரிசி சொன்னபடியே, நான் வனாந்திரத்திலே கூப்பிடுகிறவனுடைய சத்தமாயிருக்கிறேன் என்றான்.

இன்றைய நாட்களில் அநேகர் தன்னை, அருட்தந்தை, பேராயர், பிஷப், ஃபாதர், அப்போஸ்தலன், ரெவரெண்டு, பாஸ்டர் என்றும் சொல்லி அழைத்துக்கொள்ளுகிறார்கள். ஆனால் யோவானோ தன்னை சத்தம் என்று சொல்லி, தம்முடைய ஊழிய காலங்களில் இப்படியாக உபதேசித்து இருக்கிறார்.

மத்தேயு23:2–ல் வேதபாரகரும், பரிசேயரும், மோசேயினுடைய ஆசனத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்றும் மத்தேயு23:5–ல் அவர்கள் தங்கள் கிரியைகளையெல்லாம் மனுஷர்காண வேண்டுமென்று செய்கிறார்கள் தங்கள் காப்பு நாடாக்களை அகலமாக்கி தங்கள் வஸ்திரங்களின் தொங்கல்களை பெரிதாக்கி விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெபஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும், மனுஷரால் ரபீ, ரபீ என்று அழைக்கப்படுவதையும் விரும்புகிறார்கள்.

நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு போதகராயிருக்கிறார். நீங்கள் எல்லோரும் சகோதரராய் இருக்கிறீர்கள்.

பூமியிலே ஒருவரையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள். பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்கு பிதாவாயிருக்கிறார்.

நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள் கிறிஸ்து ஒருவரே உங்களுக்கு குருவாயிருக்கிறார் என்று! நமது ஆண்டவர் குறிப்பிடுகிறார். இன்றைய நாட்களில் அநேகர் இந்த உபதேசங்களை மறைத்து தன் இஷ்டமான உபதேசங்களை, மனுஷர் உபதேசங்களை, சுய உபதேசங்களை செய்கிறார்கள். மேலும் கிறிஸ்துவானவர் அப்படிப்பட்ட உபதேசங்களை செய்கிறவர்களை இப்படியாக கண்டிக்கிறார். மத்.23:15

மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும், பூமியையும் சுற்றி திரிகிறீர்கள். அவன் உங்கள் மார்க்கத்தானானபோது அவனை உங்களிலும் இரட்டிப்பான நரகத்தின் மகனாக்குகிறீர்கள் என்றார். இன்று அநேகர் சுய இஷ்டமான உபதேசத்தினாலே அநேகரை நரகத்தின் மகனாக்குகிறார்கள். ஆனால் இயேசுவோடு இருந்த சீடர்களோ தங்களை இயேசுவின் ஊழியக்காரர் என்கிறார்கள்.

இயேசுவோடு இருந்த சீஷர்கள் அப்போஸ்தலர்கள் என்ற தகுதியை வரத்தை பெற்றிருந்தாலும் தங்களை கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்று பேதுருவும் தனது 2ம் நிருபத்தில் தன்னைக் குறித்து சொல்லியிருக்கிறார். 2பேது1–ல் ஊழியக்காரர் என்றே சொல்லுகிறார். பவுலும் 2கொரி.4:5–ல் தன்னை கிறிஸ்துவின் ஊழிக்காரன் என்றே சொல்லியிருக்கிறார்.

கிறிஸ்துவின் ஊழியக்காரன் என்றால் இயேசுவிற்கு ஊழியம் செய்வது. இயேசுவானவர் சொன்னபடி "நான் உங்களுக்கு கட்டளையிட்டயாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்" என்றார் (மத்.28:20).

நாமும் இயேசுவானவர் சொல்லிய உபதேசத்தை சொல்லுவோம்

யோவான்ஸ்நானனைப்போல தேவனுடைய சத்தமாய் இருப்போம்.

# தேவனுடைய கிருபை

## GRACE OF GOD

அவர் எனக்கு நம்பிக்கையையும் உற்சாகத்தையும் அளிக்கிறார்
ஒவ்வொரு புதிய நாளையும் சந்திக்க,
அவர் என்னை இருளினூடே வழிநடத்துகிறார்
கண்டு வழி காட்ட
அவர் என்னை தேற்றித் தாங்குகிறார்
என்னுடைய துயர நேரங்களில்,
அவர் எனக்கு ஆத்தும உணர்வை அருளுகிறார்
உண்மையான சந்தோஷத்தைக் காண
அவர் எனக்கு மன்னிப்பருளுகிறார்
நான் வழிதவறிச் செல்லுகையில்
அவர் என் துன்பங்களிலும் என் பயங்கள் விறுவிறுப்பைக்
குறைக்கையிலும் உதவி செய்கிறார்
அவர் ஒருபோதும் என்னைக் கைவிடுகிறதில்லை
நம்பிக்கையற்ற நொடி நேரங்களில்,
ஒரு உதவிக்கரத்தை நான் நாடும்போதெல்லாம்
நான் எப்போதும் அங்கே அவரைக் கண்டுகொள்கிறேன்

# தேவன் பிரிவினையை ஏற்றுக்கொள்ளார்
# God won't accept Division




பிரிவினையானது மிக கொடிய நோய்போன்றது. ஆனால் நோய்க்கு மருந்து இல்லாமற்போகலாம். பிரிவினையை முறியடிக்க ஏற்ற மருந்து பரிசுத்த வேதாகமத்தில் உண்டு. "பிரிந்துபோகிறவன் தன் இச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக் கொள்ளுகிறான்" (நீதி.18:1). பிரிவினையைக் கர்த்தர் அனுமதிக்கிறதில்லை. ஏனென்றால் "கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா?" (1கொரி.1:13) ஆனால் நம்மில் அநேகர் நான் அந்த ஊழியனைச்சார்ந்தவன் அந்த குரூப்பில் சேர்ந்து ஊழியஞ்செய்கிறேன். உங்களோடு பேசினால் என்னை அவர்கள் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்கின்றனர். அந்தியோகியாவில் உள்ள சீஷர்களுக்கு முதல் முதல் கிறிஸ்தவர்கள் என்கிற பெயர் வழங்கப்பட்டது. இப்பெயர் வழங்கப்பட்டபோது நான் பவுலை சேர்ந்தவன் என்றோ அல்லது நான் பேதுருவை சேர்ந்தவன் என்றோ ஒருவரும் சொல்லவில்லை எல்லோரும் கிறிஸ்துவைப் பின்பற்றும் கிறிஸ்தவர்களாயிருந்தார்கள். இன்றும் நம் ஆண்டவர் நமக்கு போதிக்கும் வசனம் இதுதான் "ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்: ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" (யோவா.12:26). நீங்கள் இயேசுவைப் பின்பற்றினால் உங்களுக்குள்ளே பிரிவினை ஆவியும் இருக்காது, பிரிவினை சபையும் இருக்காது.

ஆண்டவர் ஜெபிக்கும்போது "நாம் ஒன்றாயிருக்கிறதுபோல அவர்களும் ஒன்றாயிருக்கும்படி, நீர் எனக்குத்தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன்" (யோவா.17:22) என்கிறார். தேவன் பிரிந்து இருக்கவில்லை. பிதா குமாரன் பரிசுத்தஆவியானவர் இம்மூவரும் ஒன்றாயிருக்கிறார்கள். தேவன் தம்முடைய சித்தத்தை குமாரன் மூலமாகவும் பரிசுத்தஆவியானவர் மூலமாகவும் வெளிப் படுத்துகிறார். கிறிஸ்துவானவர் உயிர்த்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார் என வேதத்தில் வாசிக்கிறோம். அந்த நித்தியத்தில் வாழப்போகும் நாம் பிரிவினையோடு இருந்தால் எப்படி? தாவீது ராஜா பாடும்போது "இதோ, சகோதரர் ஒருமித்துவாசம்பண்ணுகிறது எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது?" (சங்.133:1) என்று பாடுகிறார். உண்மைதான் ஒருமித்து வாசம்பண்ணுகிறது மிகுந்த ஆசீர்வாதத்தைக் கொண்டுவரும்.

பிரிவினைக்கு மூலகாரணமாயிருப்பது பகை. "தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷ கொலைபாதகனாயிருக்கிறான்; மனுஷ கொலைபாதக

னெவனோ அவனுக்குள் நித்திய ஜீவன் நிலைத்திராது"(1யோவா.3:15). கொலை என்பது கொடுரமான செயல். இதைக்குறித்து கர்த்தர் குறிப்பிடும் போது, "கொலை செய்யாதிருப்பாயாக என்பதும், கொலைசெய்கிறவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான் என்பதும், பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக் கிறீர்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; தன் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்பவன் நியாயத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; தன் சகோதரனை வீணனென்று சொல்லுகிறவன் ஆலோசனைச் சங்கத்தீர்ப்புக்கு ஏதுவாயிருப்பான்; மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான்"(மத்.5:21,22)என்று கர்த்தர் உரைக்கிறார். முன்னே கொலை செய்தால் தான் குற்றம் ஆனால் தற்போது நியாயமில்லாமல் கோபித்துக்கொண்டாலே குற்றம் என்று வாசிக்கின்றோம். இப்படியிருக்க நாம் சகோதரனை நியாயமில்லாமல் கோபித்துக்கொள்வதோ, மூடன் என்று சொல்லுவதோ மாபெரும் தவறாக இருக்கிறது. மேலும் " தேவனிடத்தில் அன்பு கூருகிறேனென்று ஒருவன் சொல்லியும், தன் சகோதரனைப் பகைத்தால், அவன் பொய்யன்; தான் கண்ட சகோதரனிடத்தில் அன்பு கூராமலிருக்கிறவன், தான் காணாத தேவனிடத்தில் எப்படி அன்பு கூருவான்?"(1யோவா.4:20). இங்கே தன் சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யன் என திருமறை விளக்குகிறது. திருமறை ஒருக்காலும் பொய்யுரையாது என்பது நாம் அறிந்த உண்மை. ஆக சகோதரனைப் பகைக்கிறவன் பொய்யனாயிருக்கிறான் **அவனுக்குள் சத்தியம் இல்லை.** சத்தியம் இருக்குமேயானால் பொல்லாங்கனுக்குள், அதாவது முழுவதும் பாவத்தில் கிடக்கும் பாவியை எப்படி மன்னித்து கிறிஸ்து ஏற்றுக்கொள்கிறாரோ, அதே சிந்தை அவனுக்குள்ளும் இருக்கும்.

தேவ சமூகத்தில் காணிக்கை செலுத்த வரும்போது "உன்பேரில் உன் சகோதரனுக்கு குறை உண்டென்று அங்கே நினைவுகூருவாயாகில், அங்கே தானே பலிபீடத்தின் முன் உன் காணிக்கையை வைத்து விட்டுப்போய், முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையைக் செலுத்து" (மத்.5:23,24). கர்த்தர் காணிக்கையை ஏற்றுக்கொள்ளும் முன்பு உன் சகோதரனோடே ஒப்புரவாகி, பின்பு வந்து உன் காணிக்கையை செலுத்து என்கிறார். இவ் வசனத்தை யாருக்கோ சொன்னதுபோல எடுத்துக்கொண்டு அநேகர் மெத்தனமாக இருந்து விடுகின்றனர். "இப்பபடியிருக்க, நீ உன் சகோதரனைக் குற்றவாளியென்று தீர்க்கிறதென்ன? நீ உன் சகோதரனை அற்பமாய் எண்ணுகிறதென்ன? நாமெல்லாரும் கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்போமே"(ரோம.14:10). தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்கும். கர்த்தர் சொன்ன காரியங்களுக்கு கீழ்ப்படிய வேண்டியது நமது கடமை. அதைவிடுத்து அதற்கு வியாக்கியானம் கொடுத்துக்கொண்டு காலத்தை தள்ளுவோமானால் நியாயத்தீர்ப்புக்கு எப்படி தப்புவோம்? அவருடைய வசனமே நம்மை நியாயந்தீர்க்கும்.

***பிரிந்துபோகிறவன் தன் சுயஇச்சையின்படி செய்யப்பார்க்கிறான், எல்லா ஞானத்திலும் தலையிட்டுக்கொள்ளுகிறான் - நீதி.18:1***

# சத்திய வார்த்தையில் சரித்திரம்-5

சரித்திர ஆய்வு

## பிறக்கப்போகிற மேசியாவைக் குறித்த தீர்க்கதரிசனங்களும் அவைகளின் நிறைவேறுதல்களும்

John S.Nathan, Gospel Minister
Mobile: 9841017621



**1. உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்; அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் – ஆதி.3:15**

4000 ஆண்டு கழித்து இந்த தீர்க்கதரிசன காலம் நிறைவேறினபோது, ஸ்திரீயினிடத்திற் பிறந்தவரும் நியாயப்பிரமாணத்திற்குக் கீழானவருமாகிய தம்முடைய குமாரனை தேவன் அனுப்பினார் (கலா.4:15) முதலாம் தீர்க்கதரிசனம் நிறைவேறிற்று! இங்கே ஸ்திரீயின் வித்து, சர்ப்பத்தின் (பிசாசின்) வித்து, என்றதில் முதலில் கூறப்பட்ட ஸ்திரீயின் வித்தாக இஸ்ரயேலின் மேசியாவாகவும், உலக இரட்சகராகவும் வந்த இயேசுகிறிஸ்துவே!

ஏவாள் கர்ப்பவதியாகி, காயீனைப் பெற்று, கர்த்தரால் ஒரு மனுஷனைப் பெற்றேன் – (ஆதி.4:1) என்றாள். நம்மில் அனேகரும், மேலே கூறப்பட்ட தீர்க்கதரிசனம் காயீன் வாயிலாக நிறைவேறிற்று என்று தவறாக கருதினர். ஏவாளும் தேவ உதவியினால் ஓர் ஆண் மகனை பெற்றதாக தவறாக கருதினாள்.

**2. கன்னியின் குமாரன்:**

ஆதலால் ஆண்டவர் தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தைக் கொடுப்பார்; இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவாள் – ஏசா.7:14

.... அவள் (மரியாள்) பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியாகி, யோசேப்பு அவளுடன் கூடிவருமுன்னே என்பதை கூர்ந்து கவனிக்கவும் – மத்.1:18; 24; 25; லூக்.1:26–35.

✪ கன்னி (VIRGIN) என்கிற வார்த்தை எபிரெய மொழியில் பெத்துலா (BETHULAH) என்பதாகும் (ஆதி.24:16; லேவி.21:13; உபா.22:14;23;28; நியா.11:37; 1இரா.1:2. திருமணத்திற்கு நிச்சயிக்கப்பட்ட திருமணமாகாத பெண்ணாகும்.

✪ அல்மா (ALMAH) திருமணவயதை அடைந்த பெண். ஏசா.7:14–ல் அல்மா என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது

✪ இதுவே கிரேக்க மொழியில் (PARTHENOS) பார்தீனாஸ் என்கிற வார்த்தை, கன்னி, திருமணவயதையுடைய பெண் என்று பொருளாகும் (மத்.1:23;25:1;7;11; லூக்.1:27; அப்.21:9; 1கொரி.7:25;28;33; 2கொரி.11:2 காண்க.

# எவ்வாறு ஞாயிறு ஆராதனையில் கலந்துகொள்வது

# *How to Attend Sunday Worship*

இந்த விஷயத்தில் நீங்கள் ஏற்கனவே வல்லுநனராக இருப்பீர்கள், ஆனால் இவ்விஷயத்தில் அதிகப்படியான சில குறிப்புகள் உங்களுக்குத் தேவை, தயவுசெய்து சரியான முறையில் ஆராதிக்க நமக்கு உதவுகின்ற பின்வரும் தகவல்களை கவனிப்போம்:

1. **ஞாயிற்றுக் கிழமையில் சீக்கிரமாய் படுக்கையை விட்டு எழும்பி சனிக்கிழமை மாலை சீக்கிரமாக படுக்கைக்குச் செல்லுங்கள்.** நான்றாக ஒய்வெடுத்துக் கொள்ளுங்கள். ஆராதனைக்கு தூங்கி வழிந்துகொண்டு செல்லாதீர்கள்.

2. **சபை கூடுகைக்குச் சீக்கிரமாக வாருங்கள்.** கடைசி நிமிடம் வரை காத்துக்கொண்டு இராதீர்கள். உங்களுடைய வருகை ஒழுங்குபடுத்துவதற்கும், வழி காட்டுவதற்கும், ஏற்பாடுகள் செய்வதற்கும் இன்னும் இதுபோன்ற காரியங்களுக்கும் தேவையாயிருக்கிறது. நீங்கள் வழியில் செல்லுகின்ற புதியவரை நிறுத்தி அழைத்து வருகிறவராக இருக்கலாம்.

3. **நீங்கள் உங்களுடைய வேதாகமம், பேனா, பேப்பர் மற்றும் குறிப்பேடுகளையும் கொண்டுவாருங்கள்.** செய்தி நேரத்தில் அல்லது வேதபாடநேரத்தில் குறிப்புகள் எடுத்து அவைகளை எதிர்கால நலனுக்காக நேர்த்தியாக வரிசைப்படுத்திக்கொள்ளுங்கள்.

4. **ஊழியத்தில் பங்குகொள்ளுங்கள்.** பாடுங்கள், ஜெபியுங்கள், ஏற்றவேளையில் வினா எழுப்புங்கள் மேலும் ஏகசிந்தையுடன் ஒத்துக்கொள்ளும்போது இருதயத்தின் ஆழத்திலிருந்து "ஆமென்" என்று சொல்லுங்கள்.

5. **விருந்தினர்களை சந்தியுங்கள்.** உங்களை அறிமுகப்படுத்தி அவர்கள் உங்களை சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை ஏற்படுத்துங்கள். அவர்கள் வேதத்தை அறியாதவர்களாயிருந்தால் உங்களுடைய வேத அறிவினைப் அவர்களோடு பகிர்ந்து கொண்டு வேதவசனங்களை அவர்கள் கண்டுகொள்ளும்படி செய்யுங்கள்.

6. **உற்சாகமூட்டி ஒருவரை ஒருவர் வாழ்த்துங்கள்:** குறிப்பாக பிரசங்கித்தவரை, பாடல் நடத்துனரை, ஜெபத்தினை நடத்தினவர்களை, உடன் கிறிஸ்தவர்களை, புதிய விருந்தினர்களை மேலும் மற்றவர்களையும் இவ்வாறு செய்யுங்கள்.

7. **ஆராதனைக்குப் பிறகு சகோதரர்களை, விசேஷமான விருந்தினர்களை சந்திக்கக் கூடுதல் நேரத்தைச் செலவிடுங்கள்.** வேகமாக வெளியேறிவிடாதீர்கள். மேலும் உங்களுக்குத் தெரிந்தவர்களிடம் மட்டுமே பேசாதீர்கள். விருந்தினர்கள் அல்லது புதிதாக வருகைதந்தவர்கள் சந்தோஷமாக ஏற்றுக்கொள்ளும் மனநிலையை உருவாக்குங்கள்.

சிறுவர் பகுதி

# சரட்டையாகிலும்...

**வேதவாசிப்பு: ஆதியாகமம் 14:21-24**



ஆபிரகாமைப் பற்றி நாம் அநேகமுறை கேள்விப்பட்டிருக்கிறோம். அவர் நமது விசுவாசத்தின் தந்தை என்று அழைக்கப்படுகிறார். நம்முடைய தேவனாகிய கர்த்தர் இந்த ஆபிரகாமை அபரிவிதமாக ஆசீர்வதித்திருந்தார். எப்படியென்றால் "நான் உன்னைப் பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய், உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னைச் சபிக்கிறவனைச் சபிப்பேன்; பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார்". இந்த ஆசீர்வாதத்துக்கு ஆபிரகாம் பாத்திரவனாயிருந்தார். சரி, என்ன சரடு என்று கேட்கிறீர்களா? ஆபிரகாம் பிறனுக்குள்ள ஒரு சாதாரண சரட்டைக் கூட இச்சிக்கவில்லை.

சோதோமின் ராஜா ஆபிராமை நோக்கி: ஜனங்களை எனக்குத்தாரும், பொருள்களை நீர் எடுத்துக்கொள்ளும் என்றான். அதற்கு, ஆபிராம் சோதோமின் ராஜாவைப்பார்த்து: ஆபிராமை ஐசுவரியவானாக்கினேன் என்று நீர் சொல்லாதபடிக்கு **நான் ஒரு சரட்டையாகிலும்** பாதரட்சையின் வாரையாகிலும் உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன் என்று வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார்.

பொருள்கள் என்றால் நமக்கு கொள்ளை ஆசை. இதைத்தா அதைத்தா என்று இருக்கிற எல்லாவற்றையும் கேட்டுவாங்கிவிடுவோம். ஆனால் ஆபிரகாமோ அப்படியில்லை. கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன் என்றார். ஏன் நாமும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சிக்காது நம்முடைய தேவனுக்கு நேராக ஜெபித்து பெற்றுக்கொள்ளக்கூடாது? முடியும் இல்லையா? அப்படியானால் நாமும் விசுவாசத்தின் தகப்பன் ஆபிரகாமைப்போல பிறனுக்குள்ள ஒரு சின்ன பென்சிலைக்கூட எடுத்துக்கொள்ளாமல் தேவனிடத்தில் கேட்போம். அவர் ஆபிரகாமை ஆசீர்வதித்தது போல நம்மையும் ஆசீர்வதித்து வழிநடத்துவார்.

**மனப்பாட வசனம்**

"வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனாகிய கர்த்தருக்கு நேராக என் கையை உயர்த்துகிறேன்" (ஆதியாகமம்14:23)

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக – யாத்திராகமம் 20:17

# வேத அறிவுப் போட்டி எண்.84

***போட்டியாளர்கள் கவனத்திற்கு,***


*கீழ்க்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் 50 பைசா தபால் கார்டில்* ***இம்மாதம் 25ம்தேதிக்குள்*** *எமக்கு வந்து சேரும்படி எழுதி அனுப்பிவையுங்கள். இருபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இப்போட்டியில் கலந்துகொள்ளலாம்.* ***பதிவு எண்ணுடன் உங்கள் முழு முகவரியை தெளிவாக எழுதவும்.***

1. தன் மகனை நோக்கி: உன் முகத்தைக் காண்பேன் என்று நான் நினைக்கவில்லை என்றவன் யார்?
2. நம்முடைய பழைய மனுஷன் எவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்?
3. நீதியும் நியாயமும் யாருடைய சிங்காசத்தின் ஆதாரம்?
4. தினந்தோறும் வேதவாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தவர்கள் யார்?
5. மேகம் பறந்துபோகிறதுபோல, பாதாளத்தில் இறங்குகிறவன் இனி என்ன செய்யான்?
6. உள்ளவைகளை அவமாக்கும்படி, உலகத்தின் இழிவானவைகளையும், அற்பமாய் எண்ணப்பட்டவைகளையும், இல்லாதவைகளையும் தெரிந்துகொண்டவர் யார்?
7. எந்த தீர்க்கதரிசியின் காலத்திலே இந்த ஜனங்கள் கர்த்தருடைய ஆலயத்தைக் கட்டுகிறதற்கு ஏற்ற காலம் இன்னும் வரவில்லை என்கிறார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொன்னார்?
8. கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று நீங்கள் சோதித்துப்பாருங்கள் என்று எழுதும் அப்போஸ்தலன் யார்?
9. சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறதுபோல், பூமி எவருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்?
10. நியாயப்பிரமாணத்தின்படி பரிசேயனாக இருந்த அப்போஸ்தலன் யார்?

*என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் (பிலிப்பியர்4:19)*


Owned and published by B.Arjunan from 17.2.102 D/5, Rajan Nagar, Batlagundu - 624 202 and Printed by R.Sathiyamoorthi at Bharathi Press,14/13/24 Melamanthai Street, Batlagundu - 624 202
Editor: B.Arjunan.

**கிறிஸ்துவின் சபையார் வழங்கும் கிறிஸ்துவின் வசனம் நிகழ்ச்சியை**






**உங்கள் வானொலியில்**

இலங்கை ஆசிய சேவை SW 25 மற்றும் 41 மீட்டரில்
ஒவ்வொரு புதன் மாலை 5.45 முதல் 6.00 வரை கேளுங்கள் மேலும்
கொழும்பு சர்வதேச ஒலிபரப்பு MW 873 khz-இல் மாதத்தின் கடைசி
சனிக்கிழமை காலை 8.50 முதல் 9.05 மணி வரையிலும் கேளுங்கள்




**உங்கள் WIN TV யில்**

ஒவ்வொரு வாரமும் திங்கள் முதல் வெள்ளிவரை
காலை 6.15 முதல் 6.30 மணி வரை பார்த்து
சத்தியத்தை அறிந்துகொள்ளுங்கள்

**மாத இதழ் மற்றும் வேதபாடம்**

தேவைக்கு உடனே எழுதிப் பெற்றுக்கொள்ளுங்கள்.





**Radio & TV** -யில் வெளிவந்த தேவ செய்திகள்
அடங்கிய **CD & DVD** -க்கள் விற்பனைக்கு உள்ளது.
தேவைப்படுவோர் எங்களோடு தொடர்புகொள்ளவும்.

*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202. S. India*
*Phone:04543-263278 Mobile:94435-58041 e.mail:thewordofchrist@sancharnet.in*

R.N.I. No.TNTAM/2000/3629 Postal Registration. No. TN/SR-164/2006-2008 Lincensed to Post without pre-payment License No.TN/WPP-25/SR/2006-2008 Posted at Batlagundu Post Office on 10th August 2007.

**Monthly Magazine**

To

*From*

*Editor*
*THE WORD OF CHRIST*
*P.O.Box.No.5*
*Batlagundu - 624 202*
*S. India*